# கதை வழி திருக்குறள்

ஒரு ஊரில் பார்வதி என்ற பெண் இருந்தாள்.அவளுக்கு கண்ணன் என்ற மகன் இருந்தான். அவர்கள் மிகவும் ஏழை. பார்வதி தன் மகனை எப்படியாவது நல்லபடியாக படிக்க வைக்க வேண்டும் என்று விரும்பினாள். பார்வதி வயலில் கூலி வேலை பார்த்து தன் மகனை படிக்க வைத்தாள். கண்ணனும் தன் தாயின் சொற்படி நல்லபடியாக படித்தான்.பனிரெண்டாம் வகுப்பு தேர்வில் மாநிலத்திலேயே முதல் மாணவனாக வந்தான்.

ஆசிரியர்கள் அனைவரும் கண்ணனைப் பாராட்டியதோடு அவனது தாயையும் பாராட்டினர். அதைக் கேட்ட பார்வதி கண்ணனைப் பெற்ற பொழுது அடைந்த மகிழ்ச்சியை விட அதிக அளவு மகிழ்ச்சி அடைந்தாள்.

இதையே தான் வள்ளுவரும் தன்னுடைய குறட்பாவில்,

**“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்”**

என்று கூறுகிறார்.

www.kids.noolagam.com